# பழரசம் தயாரிப்போம்.

பழங்களில் இருந்து பழரசம் தயாரிக்கலாம். நாம் இன்று பழரசம் தயாரிப்போம்.



தேவையான பொருள்கள்

தோடம்பழம் - ஒன்று
சீனி - நான்கு மேசைக் கரண்டி
உப்பு - சிறிதளவு
தண்ணீர் - மூன்று கோப்பை
கத்தி, வடி, பாத்திரங்கள், கரண்டி



செய்யும் முறை



1. தோடம்பழத்தை எடுத்து அதன் தோலைச் சீவுங்கள்.

2. தோடம்பழத்தை இரண்டாக வெட்டுங்கள்.





3. தோடம் பழச்சாற்றை கோப்பைக்குள் பிழியுங்கள்.

4. பிழிந்த சாற்றை வடித்துக் கொள்ளுங்கள்.





5. வடித்த சாற்றுடன் சீனியையும் உப்பையும் சேர்த்துக் கலக்குங்கள்.

6. மூன்று கோப்பை நீரைச் சாற்றுடன் கலவுங்கள்.



இப்போது பழரசம் தயாராகிவிட்டது.



7. மூன்று குவளைகளில் ஊற்றி உங்கள் நண்பர்களுக்கும் கொடுத்து நீங்களும் குடியுங்கள்.

குறிப்பு :
- வாசித்து செயற்பாட்டில் ஈடுபட மாணவரை வழிப்படுத்துக. (மூன்று பேர் கொண்ட குழுக்கள்)
- வேறு பழங்களைக் கொண்டும் பழரசம் தயாரிக்க மாணவரை ஈடுபடுத்துக. (உ-ம்) எலுமிச்சம் பழம், கொடித்தோடை, அன்னாசி